## முக்கிய தொழில்துறை மாநிலமான தமிழ்நாட்டில்
# பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் செயல்படும் நிலை என்ன?
## மக்களவையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!



சென்னை, ஆக.24-

பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் தொடர்பாக தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்பி. மக்களவையில் எழுத்துபூர்வ கேள்விகளை எழுப்பினார்.

”பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) தொடங்கப்பட்டதிலிருந்து, மாநில வாரியாக, குறிப்பாக தமிழ்நாடு மாநிலத்திற்கு... அனுமதிக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன?

முக்கிய தொழில்துறை மாநிலமான தமிழ்நாட்டில் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் (PMEGP) செயல்திறனை ஒன்றிய அரசு மதிப்பீடு செய்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs) எண்ணிக்கை மற்றும் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பு பற்றிய விவரங்கள் என்ன?

குறிப்பாக தூத்துக்குடி மாவட்டத்தில் MSMEகளை மேம்படுத்த சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா? எடுக்கப்பட்டிருந்தால் அதுகுறித்த விவரங்கள் என்ன?

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவை?” என்று கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்விகள் கேட்டிருந்தார்.

இந்த கேள்விகளுக்கு ஒன்றிய அரசின் சிறு, குறு, நடுத்தர தொழில் துறை இணையமைச்சர் சுஷ்ரி ஷோபா கரண்ட்லஜே எழுத்துபூர்வமாக பதிலளித்தார். அதில்,

“பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) ஒன்றிய அரசின் திட்டமாக இருப்பதால், மாநில வாரியாக பட்ஜெட் ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை.

தேவை மற்றும் நிதி நிறுவனங்களால் அனுமதிக்கப்பட்ட கடன்களின் அடிப்படையில் இந்தத் திட்டத்துக்கான நிதி பயன்படுத்தப்படுகிறது.

PMEGP திட்டம் தொடங்கப்பட்ட 2008-09 நிதியாண்டு முதல் தற்போதைய நிதியாண்டில் (2025-26) 18.08.2025 தேதிவரைமாநிலங்கள், மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு மொத்தம் 28 ஆயிரத்து 95 கோடியே 76 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டுக்கு 1754.14 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

இதே கால கட்டத்தில் உத்திரப்பிரதேச மாநிலத்துக்கு 3791 கோடி ரூபாய், குஜராத்துக்கு 2378 கோடி ரூபாய், ஜம்மு காஷ்மீருக்கு 2075 கோடி ரூபாய் என வழங்கப்பட்டுள்ளன.

PMEGP திட்டத்தின் செயல்திறன் குறித்த மதிப்பீட்டு ஆய்வு எதுவும் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட வில்லை.

2008-09 நிதியாண்டில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து நடப்பு 2025-26 நிதியாண்டில் 18.08.2025 வரை தமிழ்நாட்டில் 68,639 நுண்தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் தமிழ்நாட்டில் உத்தேசமாக 6 லட்சத்து 40 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகிடைத்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் உட்பட நாட்டில் MSMEகளை ஊக்குவிப்பதற்காக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இவற்றில் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மட்டுமல்லாமல் குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத நிதி அறக்கட்டளை, தொழில்முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டம், குறு மற்றும் சிறு நிறுவனங்கள் கிளஸ்டர் மேம்பாட்டுத் திட்டம், MSME செயல்திறனை உயர்த்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் திட்டம், MSME சாம்பியன்ஸ் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இவை ஒவ்வொன்றைப் பற்றியும் பார்க்கலாம்.

**1. பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்:**

புதிய நுண் நிறுவனங்களை அமைப்பதில் தொழில்முனைவோருக்கு உதவுவதற்கான ஒன்றிய அரசுத் திட்டம் இதுவாகும்.

PMEGP இன் கீழ், பொதுப் பிரிவு பயனாளிகளுக்கு கிராமப்புறங்களில் திட்டச் செலவில் 25% மற்றும் நகர்ப்புறங்களில் 15% மானியம்வழங்கப்படுகிறது.

பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், பெண்கள், முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், வடகிழக்கு பிராந்தியம், மலை, எல்லைப் பகுதிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்கள் போன்ற சிறப்புப் பிரிவுகளைச் சேர்ந்த பயனாளிகளுக்கு கிராமப்புறங்களில்35% மற்றும் நகர்ப்புறங்களில் 25% என்ற அளவில் மானியம் வழங்கப்படுகிறது.

**2. குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாதத் திட்டம்:**

இந்திய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி (SIDBI), தனது உறுப்புக் கடன் நிறுவனங்கள் (MLIs) மூலம் நுண் மற்றும் சிறு நிறுவனங்களுக்கு (MSEs) பிணை பாதுகாப்பு மற்றும் மூன்றாம் தரப்பு உத்தரவாதம் இல்லாமல் வழங்கப்படும் கடன்களுக்கு... கடன் உத்தரவாதத்தை வழங்குவதற்காக, குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத அறக்கட்டளை நிதி (CGTMSE) நிறுவப்பட்டிருக்கிறது.

**3. தொழில்முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டம் (ESDP) திட்டம்:**

பட்டியல் சமுதாயத்தினர், பெண்கள், மாற்றுத்திறநாளிகள், முன்னாள் ராணுவ வீரர்கள், மற்றும் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கும் இளைஞர்களை சுயதொழில் அல்லது கூட்டுத்தொழில் செய்ய ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

புதிய நிறுவனங்களை ஊக்குவித்தல், ஏற்கனவே உள்ள MSMEகளின் திறனை மேம்படுத்துதல் மற்றும் நாட்டில் தொழில்முனைவோர் கலாச்சாரத்தை வளர்ப்பது இதன் இறுதி நோக்கமாகும்.

**4. MSME செயல் திறனை உயர்த்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் (RAMP) திட்டம்:**

உலக வங்கியின் ஆதரவோடு செயல்படுத்தப்படும் ஒன்றிய அரசின் திட்டம் இது.

இத்திட்டத்தின் வழியாக புதுமை, டிஜிட்டல் மயமாக்கல், சந்தை அணுகல், கடன் போன்ற அம்சங்களில் MSME செயல்திறனை ஊக்குவித்து மேம்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், MSME துறையின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக அனைத்துமாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கும் தலா ரூ. 5 கோடி மானியம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

5. MSME சாம்பியன்ஸ் திட்டம்:

MSME சாம்பியன்ஸ் திட்டம் என்பது நிலையான (ZED) சான்றிதழ் திட்டம், MSME போட்டி திட்டம் மற்றும் MSME புதுமையான வடிவமைப்பு மற்றும் டிஜிட்டல் திட்டம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் ஒரு முழுமையான அணுகுமுறையாகும்.

இவ்வாறு நாட்டில் MSMEகளை ஊக்குவிப்பதற்காக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது” என்று அந்த பதிலில் ஒன்றிய அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

---

<u>தமது வாழ்வை</u>

# பாட்டாளிகள், உழவர்கள், ஒடுக்கப்பட்டோரின் போராட்டங்களுக்காகவே அர்ப்பணித்தவர்!

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் சுதாகர் ரெட்டி மறைவுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, ஆக.24-**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தோழர் சுதாகர் ரெட்டி அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் “தமது வாழ்வை பாட்டாளிகள், உழவர்கள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் போராட்டங்களுக்காகவே அர்ப்பணித்தவர்!” என்று புகழாரம் சூட்டியுள்ளார்.**

முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தோழர் சுரவரம் சுதாகர் ரெட்டி அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.


தொடக்கக் காலத்தில் மாணவத் தலைவராக இருந்து, நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, பின்னாளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய தலைவராக உயர்ந்தது வரை சுதாகர் ரெட்டி அவர்கள் தனது வாழ்வைப் பாட்டாளிகள், உழவர்கள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் போராட்டங்களுக்காகவே அர்ப்பணித்தார்.

கூட்டணிப் பேச்சுவார்த்தைகள், தலைவர் கலைஞர் நினைவேந்தல் என அவர் தமிழ்நாடு வந்தபோதெல்லாம் அவரது அன்பையும் தெளிவான பார்வையையும் அருகில் இருந்து கண்டுணர்ந்திருக்கிறேன்.

நீதி மற்றும் மாண்புக்கான போராட்டத்துக்கு அவரது வாழ்வு தொடர்ந்து ஊக்கமளிக்கும். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் பொதுவுடைமை இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்தச் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---



தமிழ்நாடு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகுவைச் சந்தித்து, ஈரோடு மற்றும் நாமக்கல் பகுதிகளில் POLLUTION குறித்தும் மேலும், COMMON EFFLUENT TREATMENT PLANT (CETP) தொடர்பான தேவைகள் மற்றும் பரிந்துரைகள் குறித்தும் விரிவான கடிதத்தையும் ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. வழங்கினார்.



விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன் வளவனூர், அரசு மருத்துவமனையில் புதிதாக கட்டப்பட்டு வரும் கூடுதல் கட்டிடத்தின் கட்டுமானப் பணியை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் வளவனூர் பேரூராட்சி மன்றத் தலைவர் மீனாட்சி ஜீவா, வளவனூர் பேரூராட்சி செயலாளர் பா.ஜீவா, செயல் அலுவலர் அண்ணாதுரை, பொதுக்குழு உறுப்பினர் TNJ.சம்பத், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், துணைத் தலைவர் அசோக், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, அவைத் தலைவர் சரபோஜி, துணை செயலாளர்கள் லைட் ராஜேந்திரன், பெரியசாமி, பொருளாளர் ரகுமான், வார்டு செயலாளர்கள், மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, பேரூராட்சி சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருநெல்வேலியைச் சேர்ந்த செல்லத்துரையின் மகனாகிய ஜவஹர் சுமன், கடந்த 10 ஆண்டுகளாக சவூதி அரேபியாவின் ஜுபைலில் பணிபுரிந்து வந்தார். அங்கே மின்சாரம் தாக்கியதால் துரதிருஷ்டவசமாக உயிரிழந்தார். இந்த துயரமான சம்பவத்துக்குப் பின்னர், இது தொடர்பான தகவல் NRTIA க்கு தெரிவிக்கப்பட்டது. அயலக அணி.தம்மாம் ஒருங்கிணைப்பாளரும் சிக்கந்தர் பாபு மற்றும் துணை ஒருங்கிணைப்பாளருமான குண்டு பிலால் ஆகியோர் உடனடியாக நடவடிக்கை எடுத்து, NRTIA இளைஞர் அணி செயலாளர் அஷ்ரப், பஹத் மற்றும் ஓட்டுநர் சங்க பொறுப்பாளர் முருக லிங்கம்,அப்துல் சத்தார், ஆகியோரின் ஒத்துழைப்பின் மூலம் தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகள் தாமதமின்றி நிறைவேற்றப்பட்டு, ஜவஹர் சுமனின் உடல் திருவனந்தபுரத்திற்கு அனுப்பப்பட்டது.

---

## ‘முதல்வரின் காலை உணவு’த் திட்டம்! மாணவர்கள் மட்டுமின்றி
# தாய்மார்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்ற முன்னோடித் திட்டம்!
## ‘‘தினகரன்’’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

*சென்னை, ஆக.23-*

*முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் மாணவர்கள் மட்டுமின்றி, தாய்மார்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்று மற்ற திட்டங்களை விட இது முன்னோடி திட்டமாக போற்றப்படுகிறது என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.*

*அது வருமாறு:-*

*இந்தியாவிலேயே முதன்முறையாக, அரசு பள்ளி மாணவர்களுக்காக முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 2022 செப்டம்பர் 15 அன்று மதுரையில் தொடங்கி வைத்தார். இத்திட்டத்திற்கு கிடைத்த வரவேற்பை தொடர்ந்து, படிப்படியாக விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. முதல்கட்டமாக, 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் அரசு பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.*

*தற்போது, இந்த திட்டம் நகர பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவிபெறும் தொடக்க பள்ளிகளில் படிக்கும் 1 முதல் 5ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கும் விரிவுபடுத்த‘ப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ.404 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை வரும் செப்டம்பர் 26ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இதன் மூலம், சுமார் 3.05 லட்சம் மாணவர்கள் பயனடைவார்கள். நகர பகுதிகளிலும், கிராம பகுதிகளிலும் பள்ளிக்கு செல்லக்கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுவதால், பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது இல்லை.*



தினகரன்

ஆகஸ்ட் 23, 2025 சனிக்கிழமை

முன்னோடி திட்டம்

இந்தியாவிலேயே முதன்முறையாக, அரசு பள்ளி மாணவர்களுக்காக முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 2022 செப்டம்பர் 15 அன்று மதுரையில் தொடங்கி வைத்தார். இத்திட்டத்திற்கு கிடைத்த வரவேற்பை தொடர்ந்து, படிப்படியாக விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. முதல்கட்டமாக, 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் அரசு பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

தற்போது, இந்த திட்டம் நகர பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவிபெறும் தொடக்க பள்ளிகளில் படிக்கும் 1 முதல் 5ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ.404 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை வரும் செப்டம்பர் 26ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இதன் மூலம், சுமார் 3.05 லட்சம் மாணவர்கள் பயனடைவார்கள். நகர பகுதிகளிலும், கிராம பகுதிகளிலும் பள்ளிக்கு செல்லக்கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுவதால், பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது

*பள்ளிகள் மிக தூரமாக இருப்பது மட்டுமின்றி, சிலருடைய குடும்ப சூழலும் இதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது. இதனை மனதில் கொண்டு காலை சிற்றுண்டி திட்டத்தை தமிழக முதல்வர், நடைமுறைப்படுத்தி வருகிறார்.*

*தமிழ்நாட்டில் மதிய உணவு திட்டத்திற்கு என்று ஒரு நீண்ட வரலாறு உண்டு. 1920ம் ஆண்டு முதன்முதலில் சென்னை ஆயிரம்விளக்கு பகுதியில் உள்ள மாநகராட்சி பள்ளியில் மாணவர்களுக்கு சிற்றுண்டி வழங்க, சென்னை மாநகராட்சி தலைவராக இருந்த நீதி கட்சி தலைவர் சர்.பிட்டி. தியாகராயர் உத்தரவிட்டார்.*

*அதன்பிறகு, 1956ல் காமராஜர் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தினார். 1982ல் எம்.ஜி.ஆர். மாநிலம் முழுவதும் அங்கன்வாடிகள், கிராமப்புற பகுதிகளில் உள்ள ஆரம்ப பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்தை உருவாக்கினார். 1989ம் ஆண்டு கலைஞர் முதலமைச்சராக இருந்த போது 15 நாட்களுக்கு ஒரு முறை, மதிய உணவோடு அவித்த முட்டை வழங்கும் திட்டத்தை கொண்டு வந்தார். இது, 1998ல் வாரம் ஒரு முறை முட்டையாகவும் 2010ம் ஆண்டு முதல் எல்லா நாட்களிலும் முட்டை வழங்கும் திட்டமாகவும் மாற்றப்பட்டது. ஆரம்ப பள்ளிகளில் அனைத்து குழந்தை களுக்கும் இலவச மதிய உணவு வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடு.*

*இவை எல்லாவற்றையும் தாண்டி, ஆரம்ப பள்ளியில் பயிலும் அனைத்து குழந்தைகளுக்கும் காலை உணவு திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் துணிச்சலு டன் கொண்டு வந்துள்ளார்.*

*இந்த திட்டத்தின் மூலம் வேலைக்கு செல்லும் பெண்களின் பணிச்சுமை மற்றும் செலவு குறைக்கப்பட்டுள்ளது. குழந்தைகளின் காலை உணவை பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்பதால், பெண்களால் தங்கள் வேலைகளில் கவனம் செலுத்த முடிகிறது. குழந்தைகளிடமிருக்கும் ஊட்டச்சத்து குறைபாடு நீங்குகிறது. குழந்தைகள், பாடங்களை கவனிப்பது அதிகரிக்கிறது. இது, அவர்களது எதிர்கால கல்விக்கு வெகுவாக பயனளிக்கிறது. அதனால்தான் இந்த திட்டம், மாணவர்கள் மட்டுமின்றி, தாய்மார்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. மற்ற திட்டங்களைவிட, இது முன்னோடி திட்டமாக போற்றப்படுகிறது.*

*நீதிக்கட்சி காலத்திலிருந்து இன்றைக்கு வரை மதிய உணவு திட்டம் எப்படியெல்லாம் விரிவடைந்து, சத்துணவு திட்டமாகி, காலை உணவு திட்டம் அளவுக்கு வளர்ந்துள்ளது என்பதை கண்கூடாக பார்க்க முடிகிறது. இது, நூற்றாண்டு வரலாற்றை உணர்வுப்பூர்வமாக மனதில் நிலை நிறுத்துகிறது.*

*இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*



விடுதலைச் சிறுத்தைகள் கட்சி முன்னாள் விழுப்புரம் மாவட்டச் செயலாளர் வ.ஆற்றலரசுவின் தந்தையார் சுப்பிரமணி அவர்களின் மறைவுக்கு விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி நேரில் சென்று அஞ்சலி செலுத்தி அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் தயா. இளந்திரையன், ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், வே.கணேசன், பி.வி.ஆர்.சு.விசுவநாதன், கு.செல்வமணி, ஜெ.ஜெயபால், எஸ்.லூயிஸ், மாவட்ட கவுன்சிலர் ராஜீவ்காந்தி, ஒன்றிய நிர்வாகிகள் மோகன்தாஸ், சாம்பசிவம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் TDJ.ராஜவேல், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் RP.பரத், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பிரவின் குமார், விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் காசிநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.